தகவல் தொழில்நுட்பவியல் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

கடித எண். 1852502/தகொநு(அ.2)-2022-2, நாள் 15.03.2022

அனுப்புநர்
முனைவர் நீரஜ் மித்தல், இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாண்புமிகு அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள்,
தலைமைச் செயலகம், சென்னை – 600 009.

ஐயா,

பொருள்: தகவல் தொழில் நுட்பவியல் துறை – அரசு இணையதளத்தில் "tn.gov.in" அமைச்சர்களின் மின்னஞ்சல் முகவரிகளை பதிவேற்றம் செய்யக் கோரியது - தொடர்பாக.

பார்வை: திரு. G.M. சங்கர், (வழக்கறிஞர் & உறுப்பினர் மாநில வழக்கறிஞர் அணி, ஆம் ஆத்மி கட்சி, தமிழ்நாடு, சென்னை -91) அவர்களின் கடித எண்.AAP/L.No.25/2021, நாள் 24.12.2021.

----

பார்வையில் காணும் கடிதத்தில் மனுதாரர் கோரியதற்கிணங்க தமிழ்நாடு அரசு இணையதளத்தில் (https://www.tn.gov.in/ministerslist) தமிழ்நாடு அமைச்சரவையில் உள்ள அமைச்சர்கள் அனைவருக்கும் மின்னஞ்சல் முகவரிகள் உருவாக்கப்பட்டுப் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் பயனர் குறியீடு (User ID) மற்றும் கடவுச் சொல் (Password) ஏற்கெனவே அமைச்சர் அலுவலகங்களுக்கு நேரடியாக அனுப்பப்பட்டுள்ளன.

2. எனவே, மாண்புமிகு அமைச்சர்களின் நேர்முக உதவியாளர்கள் அனைவரும் மாண்புமிகு அமைச்சர்களின் அரசு அலுவல் சார்ந்த பணிகள் அனைத்திலும் அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள "tn.gov.in" domain கொண்ட மின்னஞ்சல் முகவரிகளை மட்டும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், இது தொடர்பாக சந்தேகம் ஏதும் இருப்பின் 044-25670783 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தங்கள் உண்மையுள்ள

15/3/2022

அரசு முதன்மைச் செயலாளருக்காக

15/3/22